**MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED GRAVEL QUARRY OF M/S. J.BASKAR GRAVEL QUARRY, S.F. NO. 169/2C4 IN GUNIPALAYAM VILLAGE, UTHUKKOTTAI TALUK, TIRUVALLUR DISTRICT ON 12.02.2021 AT 11.00 A.M. AT M.K. MAHAL, AYYANAR NAGAR, TIRUVALLUR ROAD, UTHUKKOTTAI, TIRUVALLUR DISTRICT.**

**PRESIDED BY**

| | | |
|---|---|---|
| 1. Thiru. P. Ponniah, I.A.S | : | District Collector,<br>Tiruvallur District. |
| 2. Thiru. P. Senthur Pandy | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvallur. |

**PROJECT REPRESENTATIVES**

| | | |
|---|---|---|
| 1. Thiru.J. Baskar | : | Project Proprietor<br>M/s. J.Baskar Gravel Quarry |
| 2. Thiru. N. Varadha Rajan | : | Project Advisor,<br>M/s. Hubert Enviro Care System Private Limited, Chennai. |
| Public attended | : | 47 Nos. (List enclosed) |

**District Environmental Engineer, Tiruvallur**

At the outset the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvallur welcomed the District Collector, General Public, other Government officials and others for the Public hearing of the said Project. He emphasized the importance of conducting the Public hearing for this Project. He said that Project Authority will explain about the Project through Power Point presentation.

Then, District Environmental Engineer requested the Project authority to proceed with Power Point Presentation about the Project.

**Thiru. N. Varadha Rajan, Project Advisor**

He explained the details of the project through Power Point Presentation.

**District Collector, Tiruvallur**

The District Collector requested the Public to express their views about this project.

**District Environmental Engineer, Tiruvallur**

He requested the Public to express their views about this project by introducing with their name and the place from which they came.

**Thiru. Vinothkumar, Gunipalayam Village**

He said that he had no objection for implementing this project with Government approval and adhering to Government rules and regulation without causing any hindrance to the Public. He also asked whether the said project will be implemented by using machines or blasting method? He also asked whether there will be any impact on the public living in the area in future. Further he asked whether they can raise objection if they were affected by the said project. He also asked about the methods adopted to control the dust and how the high speed of quarry vehicular movement will be controlled to avoid accident.

**Thiru. N. Varadha Rajan, Project Advisor**

He said that the gravel quarrying will be carried out for 1m depth only using JCB Equipment and no blasting will be carried out. There will not be any impact on the Public or agriculture, since the gravel quarrying will be restricted to 1 meter depth only. The gravel excavation at this quarry is very limited i.e. only 60,000 cubic meters will be quarried in 5 years. So the quantity of gravel quarried per month will be very low. The dust caused due to movement of quarry vehicles will be controlled by spraying water over the top of the gravel loaded covered vehicle and the quarry vehicles will be operated only at low speeds and there will not be any impact due to vehicle movement on the road.

**Thiru. H. Madhubabu, Environmental Activist, Hyderabad**

He requested the project proponent to implement the following:

1. The project proponent should plant green belt as much as possible to maintain ecological balance by planting fruit bearing and medicinal value trees.
2. To provide Employment, Education and Health care to the local Public.
3. The quarry should be operated following the Rules of the Central Pollution Control Board.
4. CER and CSR funds should be used for the utmost benefit of the society. Finally he recommended the authority for grant of permission to the Project Proponent.

**Thiru. N. Varadha Rajan, Project Advisor**

All suggestions given will be considered and implemented. According to the Central Pollution Control Board norms 1,200 tree saplings per hectare will be planted.

**Thiru. Sadhu Venkateshwaralu, Environmental Activist**

He welcomed the project of M/s. Baskar Gravel Quarry.

**Thiru. Kamaladasan, Nelvoy village**

He asked about the benefit of the project to agriculture.

**Thiru. N. Varadha Rajan, Project Advisor**

He said that there will not be any direct benefit to agriculture. At the latter stage the said gravel quarry site will be utilized for agriculture after excavation of gravel.

**Thiru. Raja, Gunipalayam village**

He asked about the quarry vehicles route and also said that there is a well near this quarry that has been used for drinking water for many years in their village. He asked whether the groundwater table of the nearby well will be affected due to this gravel quarry operation. He also said that a quarry had been dug deep in the same area earlier and cattle were dying due to these quarry pits.

**Thiru. N. Varadha Rajan, Project Advisor**

He said that all vehicles from the quarry site would be operated only through the State highway and not through local roads and this will not affect the local roads. He also said that the ground water would not be affected as the gravel would be excavated only to a depth of one meter.

**District Collector , Tiruvallur**

In reply to the queries raised by Thiru. Raja, Gunipalayam village regarding possibility in future of ground water depletion in the nearby well, the District Collector, Tiruvallur has explained the following:

The quarrying operation will be carried by the project proponent only after obtaining permission from the State Level Environment Impact Assessment Authority (SEIAA) and after obtaining permission & route slip from the Assistant Director, Geology and Mining, for the said project. Also, it will be monitored by the District Administration to ensure that the depth of mining does not exceed one meter. He said that the groundwater table would not be affected due to excavation of 1 meter depth of gravel on the top of quarry site and stagnation & percolation of rainwater in this quarry pit would help in raising the groundwater level.

**District Environmental Engineer, Tiruvallur**

He expressed thanks to the general public for attending this public hearing and for offering their views and also for the Project authority and to all attended the Public hearing. He further informed that the entire proceedings are recorded in audio and video system and the same will be forwarded to the State Level Environment Impact Assessment Authority.

With that the Public hearing came to an end. The Petition received during the Public hearing of the said Project is enclosed. List of Public attended the Public hearing along with recorded audio and video (CD) of the entire Proceedings of the Public hearing are enclosed.

12.2.2021
District Environmental Engineer
TNPC Board, Tiruvallur

12.2.21
District collector
Tiruvallur District

தி/ள். ஜெ. பாஸ்கர் கிராவல் குவாரி, புல.எண் 169/2C4, கூனிப்பாளையம் கிராமம், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் உத்தேசித்துள்ள 9.71.0 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள கிராவல் குவாரி குறித்து 12.02.2021 அன்று காலை 11.00 மணி அளவில் தி/ள். எம்.கே. மஹால், அய்யனார் நகர், திருவள்ளூர் சாலை, ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்ற பொது மக்கள் கருத்து கேட்புரைக் கூட்ட நடவடிக்கை விவரங்கள்.

முன்னிலை:

1. திரு. பா. பொன்னையா, இ.ஆ.ப – மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டம்.

2. திரு. பா. செந்தூர் பாண்டி – மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவள்ளூர்.

திட்டப்பிரதிநிதிகள்:

1. திரு. ஜெ. பாஸ்கர் – திட்ட உரிமையாளர், தி/ள். ஜெ. பாஸ்கர் கிராவல் குவாரி.

2. திரு. N.வரதராஜன் – திட்ட ஆலோசகர், தி/ள். ஹைடூபார்ட் என்விரோ கேர் சிஸ்டம்ஸ் (பி) லிமிடெட், சென்னை.

கலந்து கொண்ட பொதுமக்கள் – 47 ( பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருவள்ளூர்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் இக்கூட்டத்திற்கு தலைமை ஏற்கும் மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும், பொதுமக்கள், பிற துறையை சார்ந்த அரசு அலுவலர்கள் மற்றும் அனைவரையும் வரவேற்றார். மேலும் இத்திட்டத்திற்கான பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தை நடத்துவதன் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தார். பிறகு இத்திட்டம் சம்பந்தப்பட்ட விவரங்களை திட்ட நிறுவனத்தினர் நிழல் படத்தின் மூலம் எடுத்துரைப்பார்கள் என தெரிவித்தார்.

பிறகு திட்ட நிறுவனத்தினரிடம் இத்திட்டம் சம்மந்தமான விவரங்களையும் அதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்மந்தமான விளக்கங்களையும் நிழற்படம் மூலம் எடுத்துரைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

திரு. N.வரதராஜன், திட்ட ஆலோசகர்

திட்டம் குறித்த விளக்கத்தை நிழற் படம் (Power Point presentation) மூலமாக விரிவாக விளக்கினார்.

<u>மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர்:</u>

இத்திட்டம் குறித்து கருத்து கூற விரும்பும் பொதுமக்கள் அனைவரும் தங்கள் கருத்துகளை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருவள்ளூர்</u>

ஒவ்வொருவரும் தங்களின் பெயர் மற்றும் ஊரின் பெயரை தெரிவித்து தங்களுடைய கருத்துக்களை கூறுமாறு தெரிவித்தார்.

<u>திரு. வினோத்குமார், கூனிப்பாளையம் கிராமம்.</u>

பொதுமக்களுக்கு எந்த ஒரு இடையூறும் இல்லாமல், அரசாங்க ஒப்புதலுடன், அரசாங்க கட்டுப்பாட்டு விதிமுறைகளுடன் இதை செயல்படுத்தினால் தனக்கு எந்த ஒரு ஆட்ஷேபனையும் இல்லையென கூறினார். மேலும், இந்த திட்டத்தை எந்திரங்கள் மூலமாகவோ அல்லது வெடி வைத்து செயல்படுத்தப்படுமா? இதனால் ஊர்மக்களுக்கு நல்லது நடக்குமா என்றும் வருங்காலத்தில் இப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படுமா என்றும் கேட்டார். மேலும், பொதுமக்களுக்கு இத்திட்டத்தின் மூலம் பாதிப்பு ஏற்பட்டால் ஆட்ஷேபனை தெரிவிக்கலாமா என்றும் கேட்டார். மேலும் குவாரி வாகனங்கள் போகும் போது ஏற்படும் தூசு (Dust) கட்டுப்படுத்த என்ன செய்வீர்கள் என்றும் வாகனங்கள் அதிவேகத்தில் சென்று விபத்தினை ஏற்படுத்துமா, இதை எப்படி தடுப்பீர்கள் என கேள்வி எழுப்பினார்?

<u>திரு. N.வரதராஜன், திட்ட ஆலோசகர்</u>

இந்த திட்டத்தில் கிராவல் குவாரி 1 மீட்டர் ஆழத்திற்கு மட்டுமே JCB எந்திரம் மூலம் கிராவல் தோண்டி எடுக்கப்படும், இதனால் வெடி வைத்து எடுக்க தேவையில்லை. இதனால் பொதுமக்களுக்குகோ அல்லது விவசாயத்திற்கோ எந்தவொரு பாதிப்பும் எப்போதும் எற்படாது என்று கூறினார். ஏனென்றால் 1 மீட்டர் ஆழம் மட்டுமே தோண்டி எடுக்கப்படும் எனவே எந்த பாதிப்பும் வராது என்று கூறினார். இந்த குவாரியில் எடுக்கப்படுவது மிக குறைவான அளவே அதாவது 5 வருடங்களுக்கு 60,000 கனமீட்டர் மட்டுமே எடுக்கப்படும். அதனால் மாதத்திற்கு எடுக்கப்படும் கிராவல் மண்ணின் அளவு மிக குறைவானதே ஆகும். குவாரி வாகனங்களினால் ஏற்படும் தூசியினை கட்டுப்படுத்த வாகனங்களில் ஏற்றப்பட்ட கிராவல் மண் மீது நீர் தெளிப்பான் மூலம் நீர் தெளிக்கப்பட்டு முழுவதுமாக மூடப்பட்டு குறைந்த வேகத்தில் மட்டுமே வாகனங்கள் இயக்கப்படும் என்றும் இதனால் சாலைகளில் எந்த பாதிப்பும் ஏற்படாது என்று தெரிவித்தார்.

திரு. H. மதுபாபு. சுற்றுச்சூழல் ஆர்வலர், ஹைதராபாத்.

அமையவிருக்கும் குவாரி பற்றி சில ஆலோசனைகளை கூறினார். அவை பின் வருமாறு.

1. சுற்றுச்சூழலை பாதுகாக்க அதிகளவிலான மரங்களை நடவேண்டும் என்றும், பழமரங்கள் மற்றும் மூலிகைகளை நடவேண்டும் என்று கூறினார்.
2. படித்த உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு, கல்வி மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை அளிக்க வேண்டும்.
3. மத்திய மாசு கட்டுப்பாடு வாரிய விதிமுறைகளை பின் பற்றி குவாரி நடத்தப்பட வேண்டும்.
4. CER மற்றும் CSR ஒதிக்கீட்டை முற்றிலுமாக தேவையான நலனுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். முடிவில் இந்த திட்டத்திற்கான சுற்றுச்சூழல் அனுமதி அளிக்க ஆவண செய்வதாக கூறினார்.

திரு. N.வரதராஜன், திட்ட ஆலோசகர்

தாங்கள் கூறிய அனைத்து ஆலோசனைகளையும் பரிசீலிக்கப்பட்டு செயல்படுத்தப்படும். மத்திய மாசு கட்டுப்பாடு வாரிய விதிமுறையின் படி 1 ஹெக்டருக்கு 1200 மரக்கன்றுகள் நடப்படும் என்றும் தெரிவித்தார்.

திரு. சாது வெங்கடேஷ்வரலு, சுற்றுச்சூழல் ஆர்வலர்.

தி/ள்.பாஸ்கர் கிராவல் குவாரி அமையவிருப்பதை வரவேற்பதாக தெரிவித்தார்.

திரு. கமலதாசன், நெல்வாய் கிராமம்,

விவசாயத்திற்கு என்ன நன்மை கிடைக்கும்?

திரு. N.வரதராஜன், திட்ட ஆலோசகர்

விவசாயத்திற்கு நேரடி நன்மை என்று கூறமுடியாது. இந்த கிராவல் மண்ணை திட்டத்திற்கு எடுத்த பிறகு அந்த இடத்தை விவசாயத்திற்கு பயன்படுத்தலாம் என்று தெரிவித்தார்.

திரு. ராஜா, கூனிப்பாளையம் கிராமம்.

இந்த குவாரியிலிருந்து வரும் வாகனங்கள் எந்த வழியாக செல்லும் என்று கேட்டார். மேலும், எங்கள் ஊரில் பல வருடங்களாக குடிநீருக்காக பயன்படுத்தி வரும் கிணறு ஒன்று குவாரியின் அருகாமையில் உள்ளது. இந்த திட்டத்திற்காக பள்ளம் எடுக்கும் பொழுது கிணற்றின் நிலத்தடி நீர் பாதிக்கப்படுமா என்று கேட்டார். மேலும், இதே பகுதியில் முன்பு குவாரி ஒன்று

அதிக ஆழம் தோண்டி எடுத்துள்ளார்கள் என்றும் இந்த குவாரி பள்ளங்களினால் கால்நடைகள் இறந்து இருப்பதாகவும் கூறினார்.

திரு. N. வரதராஜன், திட்ட ஆலோசகர்

இந்த குவாரியிலிருந்து வரும் வாகனங்கள் அனைத்தும் மாநில நெடுஞ்சாலை (SH) வழியாக மட்டுமே இயக்கப்படும் என்றும் உள்ளூர் சாலைகள் வழியாக செல்லாது என கூறினார். இதனால் உள்ளூர் சாலைகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்றும் தெரிவித்தார். மேலும் ஒரு மீட்டர் ஆழத்திற்கு மட்டுமே கிராவல் மண் எடுப்பதால் நிலத்தடி நீர் பாதிக்கப்படாது என கூறினார்.

மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர்

திரு. ராஜா அவர்களுடைய நிலத்தடி நீர் பாதிப்பு சம்மந்தமான ஐயங்களுக்கு மாவட்ட ஆட்சியர் பின் வருமாறு விளக்கம் கூறினார்.

மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையம் (SEIAA) அனுமதி பெற்ற பிறகு வாரத்திற்கு ஒரு முறை உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை மூலமாக கிராவல் எடுக்க அனுமதி பெற்ற பிறகு பணியானது செயல்படுத்தப்படும். மேலும், ஒரு மீட்டருக்கு மேல் பள்ளம் எடுக்காமல் இருக்க மாவட்ட நிர்வாகத்தால் கண்காணிக்கப்படும். மேல் பரப்பில் இருக்கும் கிராவல் மண் 1 மீட்டர் மட்டுமே எடுக்கப்படுவதினால் நிலத்தடி நீர் பாதிக்க வாய்ப்பில்லை என்றும் இதில் தேங்கும் மழை நீரினால் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவே செய்யும் என்றும் கூறினார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருவள்ளூர்

இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்து பொது மக்கள் தங்கள் கருத்துகளை தெரிவித்தற்கும் அதற்கு திட்ட நிறுவனத்தினர் அளித்த பதில்கள் மற்றும் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியை தெரிவித்தார். பொதுமக்கள் கேட்ட கேள்விகள் மற்றும் விளக்கங்கள், அதற்கு திட்ட நிறுவனத்தினர் அளித்த விளக்கங்கள் அனைத்தும் ஆடியோ மற்றும் வீடியோவில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொண்டார். இத்துடன் பொது மக்கள் கருத்துக் கேட்புக்கூட்டம் முடிவுக்கு வந்தது. பொதுமக்களிடமிருந்து இந்த கருத்துக் கேட்புக்கூட்டம் சம்மந்தமாக பெறப்பட்ட மனு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் அனைத்தும் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை விவரங்களாக தயார் செய்து, பதிவு செய்யப்பட்ட Audio மற்றும் Video (CD) மற்றும் வருகை பதிவேட்டின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருவள்ளூர்.

மாவட்ட ஆட்சியர்,
திருவள்ளூர் மாவட்டம்.